# சங்கமம்
# SANGAMAM

" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

கூட்டுறவுக் குரல் Voice of Co-op

ஆறு 5 திருவள்ளுவர் ஆண்டு 2032 யூன் / ஆனி அருவி 9


# வெள்ளிவிழாக் கண்டு வீறுநடைபோடும் வெரித்தாஸ்தமிழ்ப்பணிதிக்கெட்டும்பரவட்டும்

## கிளி / கூ. சங்கங்களின் ஒன்றியம் வாழ்த்துச் செய்தி அனுப்பிவைப்பு

புத்தாயிரம் ஆண்டில், புதுப்பொலிவுடன் புதுயுகம் ஒன்றின் நுழைவாயிலைத் தொட்டுக்கொண்டு நிற்கும் தமிழீழ மக்களின் தன்மானப் போருக்கு வானலையூடாக உரமும், உணர்வும் உறுதியும் ஊட்டிவரும் வெரித்தாஸ் தமிழ்ப்பணிக்கு வன்னிவாழ் கூட்டுறவுக் குடும்பங்களின் சார்பில் நன்றி கலந்த வாழ்த்துக்கள்.

மனித உரிமைகளுக்காய், அநீதிகள், கொடுமைகள், இன அழிப்பு போன்ற அக்கிரமங்களுக்காய் குரல்கொடுத்தும் அதை வன்மையாக கண்டித்தும் உலக மனச்சாட்சியின் முன் நிறுத்தி: போரினாலும் பொருண்மிய தடைகளினாலும், பசியினாலும் பட்டினியாலும் வாழ்வியல் துன்பங்களை அனுபவித்து வருகின்ற ஏழைகள், ஆதரவற்ற சிறுவர்கள், முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், அகதிகள் மட்டில் இறை அன்பும் கரிசனையும்கொண்ட தங்கள் ஆத்மீக மனிதப் பணிகளையும் நினைத்து இந்நன்நாளில் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

இந்த உலகம் இறைவனுக்குச் சொந்தமானது. அதன் செல்வங்கள் எல்லா மனிதருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தில் தங்கள் நிறுவனம் அன்றும் இன்றும், என்றும் உறுதியுடன் உழைத்து வருவது உள்ளங்கை நெல்லிக்கனி. "நெற்றிக் கண்ணைக்காட்டிலும் குற்றமே குற்றம்" என்ற நக்கீ

(6ம் பக்கம் பார்க்க)



## வெரித்தாசுக்கு வாழ்த்து

- வாழ்வுரிமைக்காக இரத்தம் சிந்தும் ஓர் இனத்தின் அவலங்களை வெளிக்கொணரும் குரல்தான் வெரித்தாஸ் ஆகும். -

# வெரித்தாஸ் தமிழ்ப்பணியை வாழ்த்திய தமிழ் நெஞ்சங்கள்

- மல்லாவியில் வெள்ளிவிழா சிறப்பாக நடந்தது -

(மல்லாவி)

மல்லாவி வண்ணன் விளையாட்டரங்கில் வெரித்தாஸ் தமிழ்ப்பணியின் வெள்ளி விழா நிகழ்வு யூன் 24 அன்று மல்லாவிரகசணக்கான மக்கள் பங்கேற்க மிக கோலாகலமாக நடைபெற்றது.

கண்ணைக் கவரும் ஆற்றுகை அரங்கம் மின்னொளி பிரகாசிக்க வெரித்தாஸ் வன்னி இயக்குனர் அருட்திரு M.X கருணாரட்ணம் அடிகளார் தலைமையில் விழா தொடங்கியது

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி விழாவை தொடக்கிவைத்தார்

மங்கள குருமார்களின் மங்கள விளக்கேற்றலுடன் விழா களைகட்டத் தொடங்கியது.

தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வாழ்த்துச் செய்தியை திரு சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் வாசித்தளித்தார்.

தொடர்ந்து அறிஞர்கள் பிரமுகர்கள் நேயர்கள் மாணவர்கள் என பலதரப்பட்டவர்களின் வாழ்த்துரைகள் இடம் பெற்றன.

கூட்டுறவாளர்கள் சார்பாக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் கு சிறில் அவர்

(6ம் பக்கம் பார்க்க)

# 44வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் காந்திவிடுதி - குருகுலம்

உறவுகளை இழந்த சிறார்களை அரவணைத்து பராமரிக்கும் காந்தி விடுதி. குருகுலம் என்பவற்றின் ஆண்டு நிறைவு விழா முழங்காவிலில் அமைந்துள்ள குருகுல வளாகத்தில் யூன் 23 அன்று அதன் தலைவர் திரு. சபாஸ்கரன் அவர்கள் தலை

(6ம் பக்கம் பார்க்க)

# எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த நியூயோர்க்கில் உயர்நிலை மாநாடு

(நியூயோர்க்)

மனித இனத்திற்கு அச்சுறுத்தலாகி வரும் எயிட்ஸ் நோயை கட்டுப்படுத்துவது தொடர்பாக அரசாய உயர்நிலை மாநாடு நியூயோர்க் ஐ. நா. மன்றத்தில் நடைபெற்றது.

உலகத் தலைவர்கள். மரு

(6ம் பக்கம் பார்க்க)

# மக்கள் எஜமானர்கள் அவர்களிடமே நாங்கள் சம்பளம் பெறுகின்றோம்

; மன்னார் அரச அதிபர் -

நாங்கள் மக்கள் சேவகர்கள் மக்களே எஜமானர்கள் அவர்களிடமிருந்துதான் சம்பளம் பெறுகிறோம் எனவே எங்களுடைய சேவை அனைத்தும் மக்களைச் சென்றடைய வேண்டும்; என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அதிபர்கள் ஆசிரியர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு மன்னார் அரசாங்க அதிபர் வே: விசுவலிங்கம் அவர்கள் வருகை தந்தார். இவ்வேளை அப்பகுதியிலுள்ள அதிபர்கள் ஆசிரியர்களை தெட்சணா மருதமடு அ. த. க

6ம் பக்கம் பார்க்க)

# நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்

எட்டாவது பேராளர் மாநாட்டில் தெரிவிப்பு

இலுப்பைக் கடவையில் நடைபெற்ற தமிழீழ போர் எழுச்சிக் குழுக்களின் எட்டாவது பேராளர் மாநாட்டை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி தொடக்கிவைத்தார்.

மடு - அடம்பன் பிரதேச போரெழுச்சிக் குழுவின் தலைவர் பி. சௌந்தரநாயகம் தலைமையில் இலுப்பைக் கடவை அ. த. க பாடசா

(6ம் பக்கம் பார்க்க)

## சங்கமம்

4 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றை வெளியிட இருக்கிறது இம்மலருக்கான ஆக்கங்களை படைப்பாளிகளிடமிருந்தும், மாணவர்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம சிறந்த படைப்புக்களுக்கு பரிசில்கள் உண்டு.
(மாணவர் ஆக்கம் பிரிவு ரீதியாக பரிசிலிக்கப்படும்)

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை

"விடயங்கள் கீழ் குறிப்பிட்ட தலைப்புக்கு பொருத்தமாகவும் சமகால பார்வையாகவும் இருக்க வேண்டும்"

முடிவுத்திகதி: 31-07 2001

- சமூக பொருண்மிய மேம்பாட்டில் கூட்டுறவின் பங்கு
- போரியல் வாழ்வுடன் இணைந்த கூட்டுறவு
- கூட்டுறவும் கிராமிய தொழில்துறையும்
- கைத்தொழில் புரட்சியும் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கும்

# பன்னாட்டு கம்பனிகளின் உலக மயமாக்கல் கொள்கை கூட்டுறவை விழுங்கி வருகிறது !

## " சிறந்த தலைமைத்துவத்தைப் பேணுவதன் மூலம் கூட்டுறவை வளம்படுத்த முடியும் "

மனித இனத் தோற்றத்துடன் கூட்டுறவு வாழ்க்கை முறையும் தொடங்கியது.

அறிவியல் வளர்ச்சிப் போக்கின் மையால் கூட்டுறவை சட்டமாக்கி வாழத் தெரியாமல் போயிருக்கலாம் ஆனால் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே எழுதாத கூட்டுறவு வாழ்க்கை முறை இருந்து வந்துள்ளது கவனிக்கத்தக்கது.

1/2 நூற்றாண்டுகளுக்கு முன்னர் (844) கூட்டுறவின் முன்னோடிகளாகப் போற்றப்படும் றோபேர்ட் ஒவன் கலாநிதி வில்லியம்கிங் போன்றோரின் தன்னலமற்ற உயர் இலட்சிய சிந்தனைகளால் கூட்டுறவுக் கொள்கைகள் தோற்றம் பெற்றன காலச் சுழற்சியில் கூட்டுறவுச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன, அதன் பயன்?

மனித குலம் தனது வாழ்வுத் தேவைகள் முழுவதையும் நிறைவேற்றக் கூட்டுறவுக் கொள்கைகள் காட்டும் வழியைப் பின்பற்றி பயன் பெறமுடியும்.

தொடர்ந்து பின்பற்றுவது தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் நலத்தைக் கொடுக்கும்.

இக் கொள்கையின் வழிகாட்டல்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் சமூக அநீதிகளையும், சுரண்டல்களையும் ஒழித்து நீதியும் அறமும் சார்ந்த பொதுநல சமுதாய அமைப்பொன்றை உருவாக்க வழிவகுக்கும் என "றொபர்ட் ஓவன்தன் அசைக்க முடியாத நம்பிக்கையை வெளியிட்டார்.

ஆனால் இன்று கூட்டுறவு படும்பாடு அச்சமூட்டுவதாகவே இருக்கிறது.

உலகம் பூராவும் வியாபித்து நிற்கும் கூட்டுறவின் இன்றைய நிலை குறித்து பல்வேறு ஐயப்பாடுகள் தோன்றியுள்ளன

உலக தாராள மயமாக்கல் கொள்கை கூட்டுறவு இயக்கத்தை விழுங்கி வருகிறது என்ற குரல் வேகமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

முதலாளித்துவ முறையில் கூட்டுறவு ஒன்றுதான் நல்ல அமைப்பு அதை எப்பாடு பட்டாவது அப்படியே கட்டிக் காக்க வேண்டும் என "கம்யூனிச சோசலிச வாதியான லெனின்" குறிப்பிட்டார்.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்டுக்களால் கூட்டுறவு இயக்கத்துக்கு ஆபத்து நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே "அன்று லெனின்" இப்படிக் கூறினார்.

உலக அளவில் பன்னாட்டுக் கம்பனிகளின் உச்சமட்ட சுரண்டல்களினால் கூட்டுறவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது, இதைப் போக்க உலக அளவில் திட்டம் உருவாக்க வேண்டும் என இந்திய தேசிய கூட்டுறவு வாரவிழாவில் எதிரொலித்தன.

வழி வழியாக வந்த கூட்டுறவு இயக்கத்தை அழியவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கூட்டுறவு அங்கத்தவர்களை சார்ந்திருக்கிறது.

> தலைமைத்துவத்தினை மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் ஒருவர் தன் கீழ் பணிபுரிபவர்களை நல்ல முறையில் வழி நடாத்தி அவர்கள் மூலம் செயற்பாடுகளை நிறைவேற்றக் கூடிய "வலுவினை" (Power) பெற்றிருக்கவேண்டும் வலு எனப்படுவது பிறிதொருவர் மீது செல்வாக்கினை செலுத்தக்கூடிய ஆற்றலைக் குறிப்பதாகும்.

கூட்டுறவுத் தலைமைத்துவத்தினைப் பெற்றுள்ளவர்கள் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும் இலங்கையைப் பொறுத்தவரையில் யுத்த நெருக்கடிகளினால் கூட்டுறவு பாதிப்புற்றுள்ளது, கூட்டுறவுத்துறைக்கு தனியான அமைச்சு ஒதுக்கப்பட்டபோதும் எந்த வித நன்மையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடைக்கவில்லை இதற்கு காரணம் நலிந்துபோன அரசின் பொருளாதாரக் கொள்கைகளேயாகும்.

சிறந்த வழிகாட்டல்கள் மூலம் கூட்டுறவை கட்டி வளர்க்க இளம் தலைமுறையினர் முன்வர வேண்டும் இதற்கு வலுவான தலைமை உருவாக வேண்டும் சிறந்த தலைமைத்துவத்தின் ஊடாக நாம் அனைத்தையும் பெறமுடியும்!

தலைமைத்துவம் என்றால் என்ன?

மனித வளங்களை HUMANRE SOUREES ஒருமுகப் படுத்தி எத்தகைய தடைவரினும் தளராது நின்று குறிக்கோளை அடைவது தலைமைத்துவமாகும்,

மனித வளங்களை வழிநடத்திச் சென்று இலக்கினை அடைய முற்படும் எவரும் தலைவராக உயர முடியும் அவ்வாறான ஒருவருக்கு தலைமைத்துவம் தானாகவே தேடி வந்து அமையும் அவருக்கு தலைமைத்துவம் வேண்டப்படுகிறது.

அவர் நாட்டின் தலைவராகவோ அல்லது ஒரு அமைப்பின் தலைவராகவோ வரமுடியும்.

நாட்டின் தலைவர் மக்களை வழிநடாத்திச் செல்வார் அமைப்பின் தலைவர் உறுப்பினர்களை வழி நடாத்திச் செல்வார்.

தன் கீழ் உள்ள உறுப்பினர்களையும் நிறுவனப் பணியாளர்களையும் வழிநடாத்தி தன்னிச்சையான முறையில் அவர்களிடமிருந்து ஒத்துழைப்பினைப் பெற்று அதன் ஊடாக இலக்கினை அடைய முற்படுவது தொடர்பாக இயங்கும் செய் முறையினை (DYNOMIC PROCESS) குறிக்கின்றது.

இதை ஆழ்ந்து உற்று நோக்கின் தலைமைத்துவம் ஆனது பிறருடன் தொடர்புடையதாகும் அதாவது தலைமைத்துவம் ஆனது பின்பற்றுபவர்களை அல்லது வழிநடத்துபவர்களை கொண்டிருத்தல் வேண்டும் அத்துடன்! தலைமைத்துவம் "ஒரு இயங்கும் செய் முறை" என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமைத்துவத்தினை மனமுவந்து ஏற்றுக் கொள்ளும் ஒருவர் தன் கீழ் பணிபுரிபவர்களை நல்ல முறையில் வழிநடாத்தி அவர்கள் மூலம் செயற்பாடுகளை நிறைவேற்றக் கூடிய "வலுவினை" (POWER) பெற்றிருக்க வேண்டும்.

வலு எனப்படுவது பிறிதொருவர் மீது செல்வாக்கினை செலுத்தக் கூடிய ஆற்றலைக் குறிப்பதாகும் "செல்வாக்கு" (INFLUENCE) என்பது பிறிதொருவரின் நடத்தை அல்லது மனப்போக்கின் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆட்சி செலுத்துவது அல்லது மாற்றத்தை உண்டாக்கக் கூடிய செயற்பாடுகளைக் குறிக்கின்றது:

நிறுவனத்தில் சிறந்த தலைமைத்துவத்தைப் பேணுவதன் மூலம் நிறைய சாதனை புரிய முடியும்.

தலைமைத்துவத்தினை ஏற்பவர் தனது வலுவினை தவறாக பயன்படுத்த முடியும் எனினும் வலுவின்றி ஒருவர் தலைவராக நீடிக்க முடியாது.

ஒரு தலைமைத்துவத்தை ஏற்க ஒருவர் ஏன் விரும்புகிறார் இதற்கு பல்வேறு காரணங்களை எடுத்துக் கூறலாம்

சிலர் தமது வலுவினைப்பெற்றுக் கொள்ள தலைமையை ஏற்கலாம் சிலர் தமதுகௌரவத்தினை தமது உயர்த்திக் கொள்ள தலைமைத்துவத்தினை ஏற்கலாம்; சிலர் தமது சுயவிருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு தலைமைத்துவத்தினை ஏற்க விரும்பலாம் ஆனால் இத்தகைய விருப்பங்களுக்காக ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்க விரும்பலாம் ஆனால் இத்தகைய வருப்பங்களுக்காக ஒருவர் தலைமைப் பொறுப்பை விரும்பின் அவர் ஒரு சிறந்த தலைமைத்துவத்தினைப் பேண முடியாது சிறந்த தலைவராக உருவாக முடியாது இறுதியில் பிறரை வழி நடத்தவோ அல்லது நிறுவனத்தின் இலக்கினை அடையவோ வாய்ப்பில்லாமல் போய்விடும்.

### பிரகாஸ்

உண்மையில் நிறுவனத்தின் தலைமைத்துவத்தினை ஏற்கும் ஒருவர் நிறுவனத்தின் நோக்கினை அடைவதற்கோ அல்லது பொதுநோக்கில் கருமங்களை மேற்கொள்வதற்கோ அல்லது சமுதாய வளர்ச்சிக்காகவோ தலைமைத்துவத்தினை ஏற்றல் வேண்டும் சாதனைகளைப் (Achievement) புரிவதற்காகவே தலைவனாக வேண்டும்

தலைமைத்துவத்தினை ஏற்பவர் சில திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்

இத்திறன்கள் (Skills) பிறப்பினால் ஏற்படுவது எனக் கூறுவதை விட அவற்றினை நல்ல முறையில் விருத்திசெய்ய முடியுமென கூறுவதே பொருத்தமானதாகும் ஏனெனில் தலைவர்கள் பிறக்கின்றார்கள் எனக் கூறுவதிலும் பார்க்க உருவாக்கப்படுகின்றார்கள் எனக் கூறுவதே சிறந்ததாகும்

தலைமைத்துவத்தினை ஏற்கும் ஒருவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடுநிலை தவறக் கூடாது.

தலைமைத்துவத்தினை ஏற்பவர் "மனித தேர்ச்சித்திறனை" (Humanskills) கொண்டிருத்தல்வேண்டும் மனித தேர்ச்சித் திறன் என்றால் பிறருடன் இணைந்து வேலை செய்யும் ஆற்றல், பிறரை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் பிறருடைய உணர்வுகளைப் புரியும் ஆற்றல் தேவையான நேரத்தில் விட்டுக் கொடுத்து வழிநடாத்தும் ஆற்றல்

தலைப்பட்டவர் அல்லது சம்பந்தப்பட்ட தொகுதியினரை ஊக்கப்படுத்தி அவர்கள் மூலம் செயற்பாடுகளை நிறைவேற்றி இலக்கினை அடையக் கூடிய வினைத் திறன்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றது.

(தொடரும்)

# இலங்கை கூட்டுறவு இயக்க வரலாறும் கூட்டுறவு இயக்கம் எதிர்நோக்குகின்ற சிக்கல்களும் சவால்களும்

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் சுமார் 90 ஆண்டு காலத்திலிருந்து செயற்பட்டு வந்தாலும் கூட்டுறவு எமது சரித்திரத்தின் ஆரம்பத்திலிருந்தே எமது சங்க வாழ்க்கையின் ஓர் அம்சமாக இருந்துவந்துள்ளது அதன் ஆரம்பம் நாணயச்சங்க இயக்கத்துடன் ஆனதாகும்.

1906 முதலாவது நாணயச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டதோடு 1912லேயே பதிவு செய்யப்பட்டது இவ்வாறு பதிவு சங்கங்களை அமைப்பதற்கு விவசாயக் கடனின் தேவையே ஓர் அடிப்படையாக அமைந்தது. நாணயச் சங்கங்களின் பிரதான குறிக்கோளாக இருந்தது யாதெனில் விவசாய அங்கத்தவர்களுக்கு கடன் வழங்குவதாகும். 1911 இலும் 1921 இலும் நிறைவேற்றப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின் மூலம் இதர சங்கங்கள் உட்பட்டக்கூடியவாறு திருத்தங்கள் இடம்பெற்றன. 1930 இல் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தமையால் சங்கங்களைப் பதிவு செய்வதற்காக கூட்டுறவுத் திணைக்களம் உருவாக்கப்பட்டது!

2 ஆம் உலக மகாயுத்தத்துடனேயே பெரும் உணவுப் பொருட் பஞ்சம் ஏற்பட்டது கையிலிருந்த உணவுப் பொருட்களில் நியாயமான விலைக்கு அனைவரும் சமமாக பகிர வேண்டியிருந்தது இதற்காக சில்லறை வர்த்தக நிலையங்கள் தேவைப்பட்டபடியால் 1942 இல் சிறு சங்கங்களை நிறுவுவதற்கு உச்சாகமூட்டப்பட்டது 1945 ஆம் ஆண்டளவில் 38 இலட்சம் நுகர்ச்சியாளர்களுக்கு சேவை செய்வதற்கான சுமார் 4000 சங்கங்கள் நிறுவப்பட்டன உலக மகாயுத்தத்தின் பின்னர் விவசாய அபிவிருத்திக்காகவும் விவசாய உற்பத்திகள் அதிகரிப்பதற்காகவும் விவசாயிகளை சுரண்டும் வர்த்தகர்களிடமிருந்து விடுவிப்பதற்காகவும் விவசாய உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இச் சங்கங்கள் நெல் மற்றும் மேலதிக உணவுப் பயிர்களைச் சாகுபடி செய்தது.

இக்காலத்திற்குள் சமக்காரர்கள் மத்தியில் கூட்டுறவு பற்றிய ஊக்கம் அதிகரித்து வந்தது. கிராம மட்டத்திலான அபிவிருத்தியில் முதலிடம் கூட்டுறவுக்கு உரித்தானது கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரச விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 1957 இல் அன்றைய அரசு மேற்கொண்ட கொள்கைத் தீர்மானத்திற்கிணங்க சகல கிராமங்களிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது

1969 இல் கூட்டுறவு இயக்கம், அதன் நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக லெயிட்லோ அவர்களின் தலைமையில் அரச ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டது அவ்வாணைக் குழுவின் ஆலோசனைக்கிணங்க 1971

க. சிவகுமார்
செயலாளர்
கிளி / மாவட்ட கூட் சபை

இன் இயக்கத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன, அன்று கிராமமட்டத்தில் ஆரம்பச் சங்கங்களாக இருந்த சுமார் 5000 சங்கங்கள் பாரிய அளவிலான 380 ப. நோ. கூ. சங்கங்களாக அமைக்கப்பட்டன. இதன் விளைவாக பொருளாதார முன்னேற்றமும் அங்கத்துவ அதிகரிப்பும் விற்பனையும் பெரிதும் அதிகரித்துள்ளன இப் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் துகர்ச்சிப் பணிகள் மாத்திரமன்றி உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், கடன் வசதிகள், விற்பனை, சேமிப்பு என்பன நிறைவேற்றப்பட்டன; இன்று இச்சங்கங்கள் மேலும் மாற்றமடையச் செய்யப்பட்டு 311 ப. நோ. கூ. சங்கங்களாக இருந்தாலும் பெரிதும் நுகர்ச்சிப் பணிகளிலே ஈடுபட்டு வருகின்றன 1971 மறுசீரமைப்பின் காரணமாக செயற்பட்டு நிலையங்களான ப. நோ. கூ. சங்கங்களில் கிராமிய வங்கிகள் நிறுவப்பட்டு அவை கிராமம் வரை கொண்டு செல்லப்பட்டது. அத்துடன் தேசிய மட்டத்திலான கூட்டுறவு அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது.

1977 இல் புது அரசு பதவிக்கு வந்த பின்னர் பொருளாதாரக் கொள்கையில் மாற்றங்கள் இடம்பெற்றன கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 70 வருடகாலமாக நடத்தி வந்த சில்லறை வியாபார ஏகாதிபத்தியம் படிப்படியாக சரிந்தது தாராள பொருளாதாரத்தில் தனியார் வர்த்தகர்களுடன் கூட்டுறவு போட்டிகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது அரச கொள்கைகளுக்கேற்ப கூட்டுறவு நடவடிக்கைகளை உருவாக்கிக்கொள்ளும் வழி

(4ம் பக்கம் பார்க்க)

# அ. தி. மு. க. தி. மு. க. பதவி ஆசை இருக்கும் வரை திராவிட இனம் எழுச்சிபெற வாய்ப்பில்லை

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 5 வது தடவையாக தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது.

ஊழல் பேர்வழி, நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டவர் எந்தச் சூழ்நிலையிலும் முதல் அமைச்சராக முடியாது என எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பிய போதும்! தமிழ் நாட்டின் முதல்வராக ஜெயலலிதா பதவி ஏற்றுள்ளார்.

அ. தி மு க கூட்டணி 197 தொகுதிகளில் வெற்றிபெற்றதன் மூலம் இது சாத்தியமாயிற்று.

அ தி மு. கவில் வெற்றிபெற்ற 132 பேரில் 116 பேரும் சட்டசபைக்கு புதியவர்கள்.

இவர்களை வைத்துக்கொண்டு 25 பேர் கொண்ட 25 அமைச்சரவை அமைத்துளளார்.

அண்ணா திராவிட மு. கழகத்தின் முன்னோடிகள் இருவர் இப்போதும் கட்சிக்குள் இருப்பது நான் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயமாகும்

ஒருவர் டாக்டர் கே. காளிமுத்து சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்: மற்றவர் சி பொன்னையன் சட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்,

அ. தி.மு.க. வில் வேறு பொருத்தமான ஆள் இல்லாததால் அமைச்சராக வேண்டிய காளிமுத்து சபாநாயகராக ஆக்கப்பட்டிருக்கிறார்

ஜெயலலிதா அமைச்சரவையில் அவருக்கு அடுத்த நிலையில் சி பொன்னையனுக்கு முக்கியத்துவம கொடுக்கப்பட்டது ஏன்? அதறகும் விடை கூறுகிறார்கள் செய்தியாளர்கள்.

> "தமிழ் நாட்டில் 67 முதல் 2001 வரை ஒன்பது முறை சட்ட பேரவைக்கு தேர்தல் நடந்தன இதில் நான்கு தடவை தி. மு. கவும் ஐந்து தடவை அ. தி. மு கவும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தன இவர்களது ஆட்சிக் காலத்தில் திராவிட இனம் (எழுச்சி) வளர்ச்சி அடைந்துள்ளதா என்றால் இல்லை என்றே கூறலாம்".

சி பொன்னையன் எம். ஜி. ஆர் ஆட்சியில் சட்ட அமைச்சராக இருந்தவர், அவர் காலத்தில் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் இப்போது உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளாக இருக்கிறார்கள் ஊழல் வழக்குகளை சரிக்கட்ட இது உதவும் என்பதற்காகவே சி. பொன்னையனுக்கு சட்ட அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக பேசப்படுகிறது.

1972ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து எம். ஜி. ஆர். நீக்கப்பட்ட செய்தி கேட்டு காளிமுத்துவும், பொன்னையனும் தி. மு. க. வை விட்டு வெளியேறினார்கள்.

அப்போதைய சட்ட சபையில் தி. மு. க. வின் 171 உறுப்பினர்களில் எட்டுப்பேர் கருணாநிதியின் முடிவை ஆட்சேபித்து தி. மு. க. வை விட்டு வெளியேறினார்கள். அவர்கள் வருமாறு! க காளிமுத்து. சி. பொன்னையன் எஸ். டி. சோமசுந்தரம், ஜி. ஆர். எட்மண்ட். ம. குழந்தைவேலு தி. அரங்கநாயகம், ச முனு ஆதி ஜி இராகவானந்தம் ஆகியோராவார் இவர்கள் அனைவரும் எம். ஜி. ஆருடன் இணைந்து அ. தி. மு க உருவானது.

மேற்குறிப்பிட்ட அனைவரும் எம். ஜி. ஆர். ஆட்சியில் அமைச்சர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

காலப்போக்கில் ஜெயலலிதாவின் அராஜகப் போக்கினால் அ தி மு கவை விட்டு வெளியேற்றப்பட்டனர் அல்லது வெளியேறினர்

ஆரம்ப முன்னோடிகளில் அ தி மு. கவில் எஞ்சியிருப்பவர்கள் கே. காளிமுத்துவும் சி. பொன்னையனும் தான் எம் ஜி. ஆர் உருவாக்கிய வலிமையான அ தி. மு. க. பொலிவிழந்து வருகிறது என்பது மட்டும் யதார்த்தமான செய்தி

நடந்து முடிந்த தேர்தலில் தி. மு. க. அதிக இடங்களைக் கைப்பற்றவில்லை வாக்கு வங்கியுள்ள வலுவான கட்சிகளிடம் தோற்றுப் போயிருக்கலாம் தி மு. க. வின் 23 அமைச்சர்களில் 15 பேர் தோல்வி அடைந்திருக்கலாம் ஆனால் கடந்த 10 வருடங்களில் தி. மு. க. விற்கு வாக்களிப்பவர்களின் தொகை கூடியிருப்பது தெரிகிறது,

எது எவ்வாறிருப்பினும் திராவிட இயக்கத்தின் உயர்ந்த கோட்கள் மங்கி வலுவற்று செயலிழந்து வருவது தெரிகிறது.

வட இந்தியர்களின் மூடக் கொள்கைகளை எதிர்த்து தொடங்கப்பட்ட திராவிட இயக்கம் அவர்களோடு கைகோர்த்து அசிங்கமான அரசியல் நடாத்த முற்படுகிறது,

கொள்கை முழக்கமிட்ட திராவிட இயக்கம் இன்று பல கூறுகளாக பிரிந்து ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதுதான் நோக்கமென செயல்படுகிறது;

அ தி மு. க ஆகிய இருபிரிவினரும் ஆட்சியைப் பிடிக்க அலையும் வரை திராவிட மக்களின் எழுச்சி சாத்தியமில்லை இவர்களின் போக்கினால் திராவிட இனத்தின் எழுச்சி என்றுமே தடையாக இருக்கப்போகிறது.

பன்னாட்டு அரசியல் களம்

- கலி -

## ஈரானிய மக்கள் எதிர்பார்ப்பு மீண்டும் கடாமி அதிபராகிறார்

அராபியர்களின் படையெடுப்பை அன்று பாரசீகம் (ஈரான்) திரத்துடன் எதிர்த்து நின்று போரிட்டது. பெரும் இரத்தக்களரிக்குப்பின் அராபியர்களிடம் வீழ்ச்சியடைந்தது.

இறுதியில் இஸ்லாத்தை தழுவிக் கொண்டது என்பது வரலாறு.

ஆதியில் ஈரானியர்கள் பல தெய்வ வழிபாடுகளைக் கொண்டிருந்தனர் அராபியர்களின் எழுச்சியினால் ஈரானிய மக்கள் இஸ்லாத்தை தழுவும் நிலை ஏற்பட்டது

இஸ்லாமியர் அல்லாத ஈரானியர் இன்று தாங்களே இஸ்லாமிய உலகத்து எஜமானர்கள் என மார்தட்டிக் கொள்வது விந்தையாகவிருக்கிறது: அல்லது இதைத்தான் மத வெறி என்பதா?

உலகில் அதிக எண்ணிக்கையில் இஸ்லாம நாடுகள் உண்டு ஆயினும உலகம் இன்று ஈரானுக்குத்தான் பயப்படுகிறது:

ஈரானின் மத பயங்கரவாதம் தீவிரவாதம் உலகம் பூராவும் வியாபித்து நிற்பதே இதற்கு காரணம். இவ்வேளையில் (2001) பொதுத் தேர்தல் முக்கியத்துவம் பெற்றதாக எதிர்பார்க்கப்பட்டது.

இருபது வருடங்களுக்கு முன்னர் மன்னர் ஷாவின் ஆட்சி வீழ்ந்து மதத் தீவிரவாதியான ஆயத்துல்லா கொமெனி அரசைக் கைப்பற்றினார்

மன்னர் ஷாவின் ஆட்சியைக்காப்பாற்ற இறுதிவரை அமெரிக்கா போராடித் தோற்றது.

மன்னர் ஷா ஈரான் மண்ணை முத்தமிட்டவாறு தப்பி ஓடினார்

மதவாதிகளின் எழுச்சியினால் ஈரானுக்கு பொற்காலம் எனவர்ணித்த "கொமெனியின்" ஆட்சி குடிபிடித்தது மக்கள் ஆதரவைப் பெற்று மதவாதிகளின் கை மேலோங்கி நின்றது இது அவர் உயிருடன் இருக்கும் வரை நீடித்தது அதற்குப்பின் சரித்திரம் திரும்பியது.

இந்த மதவாதிகளிடம் நிறைய எதிர்பார்த்த மக்களுக்கு பெருத்த ஏமாற்றம்

மதவாதத் தீவிரப் போக்கை தவிர இவர்களிடம் ஒன்றுமில்லை என்பதை உணரத்தொடங்கினர்.

மக்கள் மனநிலை மாறியது உலகப்போக்கோடு தாங்களும் இணைந்து கொள்ளத் துடித்தனர்:

கொமெனியைத் தொடர்ந்து முகமட் கடாமி ஆட்சிப் பொறுப்பேற்றார்.

மதத் தீவிரவாதம் மக்களுக்கு எரிச்சலூட்டுவதை கடாமி உணர்ந்தார் 1997ல் நடைபெற்ற அதிபர் தேர்தலில் முகமட் கடாமி போட்டியிட்டார், சீர்திருத்தங்களைகொண்டு வருவேன் எனக்கூறி 53 வீத வாக்குகளைப்பெற்று அதிபரானார்

ஆனால் மதவாதிகளின் அழுத்தமான அதிகாரப் போக்கினால் எதிர்பார்த்த சீர்திருத்தங்களை கொண்டு வர முடியவில்லை முரண்பட்ட இரு துருவங்கள் இணைந்து போவது ஆபத்தானது என்பது ஈரானில தெரிகிறது.

மதவாதிகள் மீது அரசியல் அழுத்தத்தைப் பிரயோகித்து சீர்திருத்தங்களை கொண்டுவரும் முயற்சியில் கடாமி தோற்றுப்போனார் என்றே கூறவேண்டும்.

ஆயினும் அவர் மீண்டும் சளைக்காமல் யூன் 7ம் நாள நடந்த பொதுத் தேர்தலில் (2001) 75 வீத வாக்குகளைப்பெற்று மீண்டும் முகமட் கடாமி வெற்றிபெற்றிருக்கிறார்.

எத்தகைய இடர் வரினும் சீர்திருத்தங்களை தொடர்வேன் என சூளுரைத்த கடாமி தனது பணியைத் தொடர்வாரா? அல்லது மதவாதிகளால் பழிவாங்கப்படுவாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

## ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் இரு முறை தொழிற்கட்சி வெற்றி

பிரிட்டிஸ் நாடாளுமன்றத்திற்கு நடந்த பொதுத் தேர்தலில் ஆளும் தொழிற்கட்சி அமோக வெற்றியீட்டியதன்மூலம்ரொனிபிளேயர்மீண்டும் பிரதமராகி உள்ளார்

நூறு ஆண்டு இடைவெளிக்குப் பின் இரண்டாவது தடவையாக தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்துளளது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் படி இந்தத் தேர்தலில் வெள்ளை இன மக்கள் ஆர்வம காட்டவில்லை 1918ம் ஆண்டுக்குப் பின்த் தேர்தலில்தான் குறைந்தளவு (59%) மக்கள் வாக்களித்துள்ளார்கள் ஆசிய இனத்தவர்களின் ஆர்வமும் பங்களிப்பும் அதிகரித்துள்ளது

சுமார் 100 தொகுதிகளின் வெற்றி வாய்ப்பை தீர்மானிக்கும் சக்தியாக ஆசிய இனத்தவர்கள் உருவெடுத்துள்ளனர்

பிரிட்டிஸ் நாடாளுமன்றத்தில் இரண்டு அல்லது மூன்றுபேர் ஆசிய இனத்தைச் சார்ந்தவர்களாக இருப்பவர் இதுவேதொன்று தொட்டு வரும் வழக்கமாக இருந்து வந்துள்ளது

ஆனால் இம்முறை 77 ஆசிய இனத்தவர் போட்டியிட்டு 22 பேர் தெரிவாகியுள்ளனர் இது பிரிட்டிஸ் வரலாற்றில் ஒரு முக்கிய அம்சம் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்

தொழிற்கட்சி சார்பாக போட்டியிட்டே இவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்

ஆசிய இனத்தவர்கள் தொழிற்கட்சிக்கு வாக்களிப்பது நீண்டகாலமாக இருந்து வருகிறது

கன்சர்வேட்டிக் கட்சியின் கோட்டை எனக் கருதப்பட்ட இரு தொகுதிகளில் ஆசிய இனத்தவரின் ஆதரவுடன் தொழிற்கட்சி வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

659 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் தொழிறகட்சிக்கு 421 ஆசனமும் கன்சர் வேட்டிக் கட்சிக்கு 146 ஆசனமும் கிடைத்துள்ளது இதில் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது லிபரல்கட்சிக்குகிடைத்த 52 ஆசனந்தான்

கன்சர்வேட்டிக் கட்சியின் செல்வாக்கு சரிவடைந்து வர லிபரல் ஜனநாயகக் கட்சியின் செல்வாக்கு அதிகரித்துவருவதைக்காணமுடிகிறது

ஐரோப்பிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரிட்டன் இன்னும் யூரோ நாணயத்தை ஏற்றுக்கொள்ளவில்லை அமெரிக்க டொலருக்கு சமமாக யூரோ நாணயம் வர்த்தக சந்தையில் ஈடுபடுத்த ஐரோப்பிய நாடுகள் பெரும் முயற்சி எடுத்து வருகின்றன ரொனிபிளேயரின் வருகை இதற்கு தீர்வு காணுமா? என ஐரோப்பிய நாடுகள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன,

## நேபாளத்தில் மன்னராட்சி மடிவதும் மாவோயிஸ்டுகளின் ஆட்சி மலர்வதும் மன்னர் குடும்பத்திலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது

நேபாளத்தின் புதிய மன்னராக சீனப் போக்குடைய மன்னர் கயனேந்திரா பொறுப்பேற்றுள்ளார் (எத்தனை நாளைக்கு)

சீனாவின் நிழல் நேபாளம் மீது படிவதை எதிர்த்து வந்த இந்தியா இனிமேல் எப்படி ஜீரணிக்கப் போகிறதோ?

இந்திய விரோத சக்திகள் மையம் கொள்ளும் களமாக நேபாளம் மாறப் போகிறது என்ற அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன

மன்னர் ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புணர்வுகள் மன்னர் பிரேந்திராவின் சாணக்கியத்தினால் ஜனநாயக எதிர்ப்புணர்வுகளாக மாற்றப்பட்டன

1990 இல் பல கட்சி ஜனநாயகம் உருவாக்கப்பட்டதன் விளைவு! கோஸ்டிகள் பெருத்து ஐக்கியமின்மை ஏற்பட்டதுதான்

நேபாளம் கடந்த 10 ஆண்டுகளில் எட்டு அரசாங்கங்களை கண்டுவிட்டது இன்று ஜனநாயகத்தின் நம்பகத் தன்மை எதிரொலிக்கிறது

மன்னர் பிரேந்திரா இந்திய ஜனநாயகக் கொள்கை மீது மாறாத பற்றுக்கொண்டிருந்ததன் விளைவு கம்யூனிஸ்ட்டுகளின் எதிர்ப்பை தேடிக் கொண்டார்

மன்னர் குடும்பத்தின் மரணம் மாவோயிஸ்ட்டுக்களால் தீர்மானிக்கப்பட்டது ஆனால் பாவம் எதிர்கால மன்னரால் அமுல்படுத்தப்பட்டது

பல ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வந்த மன்னராட்சி முறைமையை

( 6ம் பக்கம் பார்க்க )

## விண்வெளியில் சுற்றுலா

(இரஷியா)

வான்வெளி ஆய்வில் அற்புத சாதனைகள் படைத்து வந்த இரஷியா மீண்டும் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளது

விண்வெளியில் மனித உலாவை தொடக்கி வைத்துள்ளது சோயுஸ் என்றவிண்கலத்தில் அமெரிக்கா கோடீஸ்வரர் 'டெனிஸ்ரைட்டரை'' ஏற்றிக் கொண்டு விண்ணுக்கு புறப்பட்டு திரும்பி விட்டது இவருடன் இரு இரசிய வீரர்களும் உடன் சென்றனர் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துடன் தற்போது இணைந்துள்ளது 61வயதான ''ரைட்டர்'' அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிநிலையமான நாசாவில் பணியாற்றியுள்ளார் விண்வெளி மனித சுற்றுலாவுக்கு அவர் கொடுத்த கட்டணம் 90 கோடி அமெரிக்கடொலராகும் ''அப்பாடி இது நமக்கு கட்டுப்படியாகுமா'' தற்போது சுற்றுலா முடிந்து பூமிக்கு திரும்பியுள்ளது.

## ஆயுள் பூராகவும் இளமை! அது எப்போது வரும்?

(சீனா)

சீனாவின் ஜீசாங் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் முதுமையைத் தடுக்க முடியுமென நிரூபித்து வருகின்றார்கள் பட்டுப் புழுவில் இருந்து மரபணு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி இம் மருந்தை கண்டுபிடித்துள்ளதாக கூறப்படுகிறது இது இன்னும் மூன்று வருடங்களில் சந்தைக்கு வந்து விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது இதன் பின்னர் வயதானவர்களை நாம் எங்கும் காண முடியாது எங்கும் இளமையானவர்களையே சந்திக்க முடியும் முதுமையைத் தடுக்கும் மருந்து எப்போதுவரும் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்

## ஆப்கான் படும்பாடு

ஆப்கானிஸ்தான் தலிபான் ஆட்சியாளர்களின் மதவாதப் போர்நெறியினால் ஆப்கான் மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

பல்வேறு ஆயுதக் குழுக்களின் மோதல்களால் போர் தீவிரமடைந்து வருகிறது கடும் வரட்சி தாண்டவமாடுகிறது குடிநீர் தட்டுப்பாடு மோசமடைந்து வருகிறது போர், வரட்சி, குடிநீரின்மை போன்றவற்றால் மக்கள் இடம்பெயர தொடங்கியுள்ளனர்

அகதி முகாம்களிலுள்ள மக்கள் ஆப்கானை விட்டு வெளியேற அவ்வப் பகுதி அண்டை நாட்டு எல்லைகளுக்கு படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

பாகிஸ்தான் எல்லையில் 5 இலட்சம் மக்கள் சூழ்ந்துள்ளனர் ஆனால் அந்நாடு எல்லையை மூடியுள்ளது. அதே போன்று ஈரான், தஜிக்கிஸ்தான் போன்ற நாடுகளின் எல்லைகளிலும் மக்கள் சூழ்ந்து நிற்கின்றனர்

இதேவேளை வரட்சி, குடிநீரின்மை காரணமாக கால்நடைகள் இறந்து வருகின்றன கைவசமுள்ள கால் நடைகளையும் மக்கள் கைவிட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது

தலிபான் அமைப்பின் வன்முறை போக்கினால் ஆப்கானிஸ்தான் உலக அரங்கில் தனிமைப்பட்டு நிற்கிறது இதனால் மக்களின் வாழ்வு நிலை கேள்விக்குறியாக மாறியுள்ளதாக அரசியல் அவதானி ஒருவர் ஆப்கான் நிலை குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

## மரண தண்டனை

(அமெரிக்கா)

அமெரிக்காவின் ஒக்கிடா நகரில் கட்டடமொன்றை குண்டு வைத்து தகர்த்து 182 பேர் கொல்லப்பட்டதற்கு காரணமாக விருந்த 33வயது ''திமோதி போல்க்'' ற்கு அமெரிக்க நீதிமன்றமொன்று மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது

37 வருடங்களுக்குப் பின் அமெரிக்காவில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது இதுவே முதல் முறையாகும். 1600க்கு மேற்பட்ட செய்தியாளர்கள் கூடியிருக்க விஷ ஊசி ஏற்றப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது

மரண தண்டனைக்குரிய வரிடம் இறுதிவிருப்பத்தைக் கேட்டார்கள் அமெரிக்க சட்ட விதிமுறைப்படி 204.8 டொலர் செலவழிக்கலாம். ஆனால் திமோதி எதுவுமே கேட்கவில்லை தனது அஸ்தியை 'இரகசியமான இடத்தில் தூவி விடுங்கள் என்றான்

(க)

## சாதனை

நோர்வே பனிக்கடலில் 7 நிமிடம் 10 வினாடி நீரில் மூழ்கி சாதனை படைத்துள்ளார் குரோவிக் என்ற இளைஞன்

## 40000 அடி உயரத்தில் இருந்து குதிப்பு

அவுஸ்திரேலியா கமோண்டோ படை வீரர் மிச்னர் 40 000 அடி உயரத்தில் இருந்துபரசூட் மூலம் குதித்து சாதனை படைத்துள்ளார்.

## வீழ்ச்சி

(இரஷியா)

இரஷியாவில்ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான பொருளாதாரவீழ்ச்சியினால் 1986 இல் ஏற்பட்ட அணுசக்தி கதிரியக்க விபத்தினால் உண்டான பேரழிவில் இருந்து விடுபட முடியாமல் தவிக்கிறது. அணு உலைகளை புனரமைக்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பியா யூனியன் நாடுகளை நம்பி இருக்க வேண்டிய நிலைக்கு இரஷியா தள்ளப்பட்டுள்ளது. ஆயினும் இந் நாடுகளின் உதவி இதுவரை கிடைக்காததால் இரஷியா பெரும் கலக்கமடைந்துள்ளது

## சுற்றுச் சூழல் தினம் யூன் - 5

பூமியின் சுற்றுச் சூழல் வேகமாக மாசடைந்து வருவதால் பூமி சூடாகி வருகிறது என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்

சர்வதேச சுற்றுச்சூழல் தினமான யூன் 5ம் நாள் 1600 விஞ்ஞானிகள் இத்தாலியின் தலைநகரில் ஒன்று கூடி பூமி மாசடைவதை தடுப்பது குறித்து ஆராய்ந்தனர்

# () தகவல் () மஞ்சரி

செய்தியாக்கம் - இரா

## இதயமா அது? கடையில் வாங்க முடியும்

(அமெரிக்கா)

இதயம் பழுதாகிவிட்டதா? இனிமேல் கவலைப்பட வேண்டாம், அமெரிக்க விஞ்ஞானக் கழகமொன்று செயற்கை இதயம் ஒன்றை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளது. அமெரிக்காவில் மட்டும் 36 இலட்சம் பேருக்கு இதயம் பழுதாகி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆண்டு தோறும் ஒரு இலட்சம்பேர் இதய நோய்க்கு ஆளாகி வருகின்றனர்.

இரத்த அழுத்தம், இதய நோய் உள்ளவர்களுக்கு ''ஏரோஷான்'' என்ற செயற்கை இதயம் பொருத்தப்பட முடியும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளாக மேற்படி அமெரிக்க நிறுவனம் எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றி அளித்துள்ளது.

இன்னும் 5 ஆண்டுகளில் சந்தையில், இதயம் விலை கொடுத்து வாங்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்ப்படங்கள்

(சென்னை)

ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வாழும் இலங்கை தமிழர்களின் வரவேற்பினால் தென்னிந்தியத் தமிழ்த் திரைப் படங்களுக்கு சர்வதேச அந்தஸ்து கிடைத்துள்ளது என பிரபல இந்திய திரைப்பட தயாரிப்பாளர் ஏ. பி வெங்கடேஸ்வரன் சென்னைத் தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

முன்பெல்லாம் ஒரு தமிழ்த் திரைப்படத்தை தயாரித்தால் இந்தியா, இலங்கை மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் மட்டும் சந்தைவாய்ப்பு ஏற்படும் சுமார் 3 கோடி ரூபா வசூல் ஆகும். ஆனால் இன்று இத்தொகையை விட கூடுதலாக சுவிற்சர்லாந்து கனடா, ஜேர்மனி பிரான்சு இங்கிலாந்து நாடுகளில் வசூல் ஆகிறது. அதுமட்டுமல்ல தமிழ்ப் படங்களுக்கு சர்வதேச அந்தஸ்தும் கிடைத்து வருகிறது.

முன்பு இந்திப் படங்களுக்கு மட்டுமே சர்வதேச மட்டத்தில் ரசிகர்கள் இருந்தார்கள் இப்போது தமிழ்ப்படங்களை வேற்று மொழிக்காரர்களும் பார்க்கிறார்கள்.

தமிழ் நாட்டில் திரையிடப்படும் நாளன்றே வெளி நாடுகளிலும் திரையிடப்பட வேண்டுமென விநியோகஸ்தர்கள் வேண்டுகோள் விடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்'

இன்று உலக அளவில் குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழர்கள் பரந்து வாழ்வது தான் இதற்கு காரணம் எனக் குறிப்பிட்டார்.

## உலகின் மிகப் பெரிய தோசை

(இந்தியா)

இந்தியாவின் அகமதாபாத் நகரில் உள்ள யாழ்ப்பாண வாசியின் சங்கலப் உணவகத்தில் உலகின் மிகப் பெரிய தோசை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது

இது உலக கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துக் கொண்டது,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராமாவதாரகோயங்கா என்ற நபர் யாழ்ப்பாணத்தில் இருந்து பொறியியலாளர்களை அழைத்து இந்த தோசையைத் தயாரித்திருக்கிறார்.

இதன் அளவு 25 அடி நீளமும் 7 1/2 கிலோ எடையும் கொண்டது இதை தயாரிக்க இந்திய ரூபாயில் 1 இலட்சம் செலவாகியதாக சங்கலப் உணவகத்தின் தலைவரான இந்த யாழ் வாசிரா. கோயங்கா தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவியில் ஒரு தோசையின் விலை 5000/- ரூபா எனவும் ஓடர்கள் குவிந்துள்ளது எனவும் ஒரு தோசையில் 25 பேர் சாப்பிடலாம் எனக் குறிப்பிட்டார்.

## ரோபோ மனிதன்

பூமியின் மக்கள் தொகை அதிகரித்து இட நெருக்கடி ஏற்பட்டு வருகிறது இதைத் தவிர்க்க விண்ணின் வேறு கோளகளில் மனிதன் குடியேற விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகின்றனர் என்பது பழைய செய்தி இதன் ஒரு கட்டமாக செவ்வாய் கிரகத்தில் கனிய வளங்களை தோண்டிப் பார்த்து ஆராய்வதற்காக விஞ்ஞானிகள் குழுவொன்று இயந்திர மனிதனை உருவாக்கி (ரோபா) அனுப்பிவைக்க ஏற்பாடு செய்துள்ளது

இந்த இயந்திர மனிதன் செவ்வாய்க்கு செல்லும் முன் உலகில் இருந்து ஒரு கூக்குரல் கேட்கிறது.

பூமியின் பல பாகங்களில் யுத்தத்தால் ஏற்பட்ட காரணிகளால் பல இலட்சக் கணக்கான கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன இவற்றை தோண்டி எடுக்க இந்த இயந்திர மனிதனை உடன் பயன்படுத்துங்கள் என்று? அப்போது மேலும் ஒரு குரல் கேட்கிறது இப்போது இது சிறிலங்காவிற்குத்தான் அவசியமாகும்

## தனிச் சிங்களத்தில் அமைச்சு சுற்றறிக்கை

மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சு தனிச் சிங்களத்தில் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு இத் தனிச் சிங்களத்திலான சுற்றறிக்கையை எவ்வாறு அனுப்புவது என மாகாண கல்வி அமைச்சு திணறுகிறது என இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது

இச்சுற்றறிக்கையுடன் சுவரொட்டிகளும் வழங்கப்படுகிறது இதில் கூட (Make Reading ohabit) என்ற ஆங்கில வாசகத்தை தவிர அனைத்துமே சிங்களத்தில்தான் உள்ளது இது குறித்து மாகாண கல்வி அமைச்சு அதிருப்தி தெரிவித்துள்ளது

## இலங்கை

முறைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது ஆயினும் சுமார் 7 இலட்சம் வறிய மக்களுக்கு 8800 கிளைகள் மூலம் உணவு முத்திரைத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியஉணவுப் பொருட்களை பகிர்வதற்கும் விலைக் கட்டுப்பாட்டு முறையாகவும் கூட்டுறவு முக்கிய பணியை நிறைவேற்றியது. அதே போன்று சங்கங்கள் மிகக் குறைந்த அளவில் சவால்களை எதிர்நோக்கி சுதந்திரத்தையும் அரச பொருளாதாரக் கொள்கைகளின் ஆதரவையும் பெற்ற தனியார் பிரிவுடன் போட்டிபோட்டு பெரும்பாலான சங்கங்கள் வெற்றி பெற்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமே.

இன்று இலங்கையில் 17 இனத்திலான கூட்டுறவுச் சங்கங்கள் உள உயர் நிலை அமைப்புக்களைச்சேர்ந்த 7 கூட்டுறவுகள் உட்பட பல்வேறு மட்டத்திலான கூட்டுறவுகள் மூலம் சுமார் 34 இலட்சம் அங்கத்தவர்களுக்குசேவையளிக்கப்படுகின்றதுகூட்டுறவு திட்டமொன்று இன்மை ஒரு குறைபாடாக இருக்கும் அதே சந்தர்ப்பத்தில் கூட்டுறவு இயக்கத்தின் எதிர்காலநடவடிக்கைகளில் பிரச்சனை, பணவீக்கம் நாட்டில் நிலவுகின்ற அமைதியின்மைஎன்பனகாரணமாக கூட்டுறவு இயக்கத்திற்கு பல வேறு தங்கு தடைகள் ஏற்பட்டுள்ளன கூட்டுறவு சனநாயக கோட்பாட்டிற்கு மாறாக இயங்குதல் அரச கொள்கைகளின் மாற்றங்கள் நிதி இடர்பாடுகள் என்பவை காரணமாக பல தடைகள் ஏற்பட்டுள்ளன.

எனினும் எமது கூட்டுறவு இயக்கம் மேற்கூறிய பல்வேறு தடைகளின் மத்தியில் சுமார் 90 வருடங்கள் வளர்ந்து வந்துள்ளது, கூட்டுறவின் முன்னேற்றத்திற்காக அதில் ஈடுபட்டுள்ள அனைவரும் ஒற்றுமையாகத் தியாக சிந்தனையுடன் இயக்கத்தின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டு உழைத்து சவால்களை எதிர்நோக்கி அவற்றைக் களைந்து செயற்படுவார்களேயாயின் இத்தடைகளை நீக்கி எதிர்காலத்தில் சிறந்த ஒரு கூட்டுறவு இயக்கத்தை கட்டியெழுப்பி எமது குறிக்கோள்களை அடைய முடியுமென்பதில் ஐயமில்லை.

3-ம் பக்கம் வரவேண்டிய தொடர்ச்சி 4-ம் பக்கம் வருகிறது

## நேபாளத்தில்

ஒழிக்க சகல கம்யூனிஸ்ட்டுக்கள் தீவிர முயற்சி எடுத்துவந்தனர் ஆனால் அன்று மின்னாமல் முழங்காமல் மன்னராஜேந்திர மன்னர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது இயற்கையின் நியதிபோலும் 1918 இல் இரசியாவில் மன்னர் குடும்பம் பூண்டோடு கொலை 21 ஆண்டுக்குப்பின் நேபாளத்தில் இவ்வாறு நடந்துள்ளது குறித்து உலக சமூகம் பெரும் அதிர்ச்சியை வெளியிட்டுள்ளது

மன்னர் பிரேந்திராவை மகாவிஸ்ணுவின் அவதாரமாக பார்க்கும் நேபாள மக்கள் இன்னும் கதறி அழுது கொண்டிருக்கின்றனர்

2.2 கோடி மக்கள் கொண்ட நேபாளம் கொடிய வறிய நாடு கல்வியில் மிகப்பெரும் பின்னடைவு தொடக்கப் பள்ளிகளே இல்லை (சிறார்கள்) என்றால் கல்வியின் நிலை எத்தகையது என்பதை புரிந்து கொள்ளமுடியும்

எது எவ்வாறு இருப்பினும் மன்னர் பிரேந்திரா மீது நேபாள மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர்

மன்னர் பிரேந்திரா ஜனநாயகத்தை துணிச்சலுடன் ஆதரித்தார் ஆயினும் பலகட்சிகளின் கூட்டரசாங்கங்கள் மக்கள் எதிர்பார்த்ததை நிறைவேற்றாததால் ஜனநாயகத்திற்கு மாற்றீடாக வேறொன்றை எதிர்பார்க்கின்றனர்

கடந்த 50 ஆண்டுகளாக மாவோயிஸ்ட் கெரில்லாக்களின் முன்னோக்கிய பாய்ச்சலில் அவர்களுக்கே தமது வலிமை பற்றி அவ்வளவு நம்பிக்கையில்லை

மன்னர் மாளிகைக்கு எதிராக பேராடினார்கள் ஒன்றும்கிடைக்கவில்லை

தற்போது உருவாகியுள்ள புதிய கூட்டு நேபாளத்தை மாற்ற முடியுமா? பிரசாந்த்பாத் முடியுமென கருதுகின்றனர்

மார்க்சியம், லெனினியம், மாவோயிசம், பெருநாட்டின் சைனிங்பாத் போன்ற கட்சி அமைப்புக்கள் ஒன்றிணைந்து பிரசாந்தபாத் (விடுதலைக் கட்சி) என தொடக்கி புதிய கோட்பாடுகளை தயாரித்துள்ளன

இவர்களது திட்டம் நேபாளத்தில் மன்னராட்சி ஜனநாயக ஆட்சிமுறையை அகற்றி கம்யூனிஸ்ட் ஆட்சியைக் கொண்டுவருவது தான்மன்னர் கொலைக்குப்பின்பிரசாந்தபாத்தின் புரட்சிகர வேலைத் திட்டங்கள் தயாராகிவிட்டன அவர்களது நோக்கம் இலட்சக்கணக்கான மக்களை அணிதிரட்டி ஆட்சி மீது தாக்குதலை தொடுத்து வெற்றிபெறுவது அதன் பின் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வது இது நடக்குமா?

நேபாளத்தில் மன்னராட்சி முடிவுறுவதும் சீனச் சார்பு கம்யூனிஸ்டுக்களின் ஆட்சி உருவாவதும் மன்னர் குடும்பத்தினாலேயே நிர்ணயிக்கப்பட்டு விட்ட வரலாற்றுப் பதிவாகிவிடும் என்பதே அரசியல் நோக்கர்களின் கணிப்பாகும்

## கூட்டுறவுச் செய்திகள்

### ஆலோசனை

மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து தலைமைக் காரியாலய பரிசோதகர் திரு எம். சி. எம். குருஸ் அவர்கள் மடுவில் இயங்கும் கூட்டுறவுத் திணைக்கள அலுவலகத்திற்கு வருகை தந்து மன்னார் பெருநிலப்பரப்பிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தையும் பார்வையிட்டு கூட்டுறவு பிராந்திய அலுவலர்களுக்கு பலவிதமான ஆலோசனைகளை வழங்கினார் என மடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

### மடு. பல நோ. கூ. சங்க கிளைக்குழுத் தேர்தல்கள்

மடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நெறியாளர் குழு தெரிவுக்கு முன்னோடியாக கிளைக் குழுத் தேர்தல்கள் மே 13ஆம் திகதி நடைபெற்றது.

ஆறு கிளைக்குழு தேர்வு நடைபெற்றது இக் கிளைக் குழுத் தேர்வை மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செல்வி பிலோமினா சுவாம்பிள்ளை அவர்களும் கூட்டுறவுப் பரிசோதகர் திரு கி. தவராசா அவர்களும் முன்னின்று நடாத்திவைத்தனர்.

### கருத்தமர்வு நடைபெற்றது

மன்னார் பூநகரி தமிழீழ நிர்வாக சேவைக்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் பதில் பொதுமுகாமையாளர்கள் கணக்காளர்கள் பதில் கணக்காளர்கள் பங்குபற்றிய கருத்தமர்வொன்று ஜெயபுரத்தில் அமைந்துள்ள மன்னார் பூநகரி தமிழீழ நிர்வாகசேவை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேற்படி நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. ஐ இசையமுதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

அறிமுகப்படுத்தப்பட்ட படிவங்கள் தொடர்பாக விளக்க உரையினை திரு தி தாமரைச்செல்வன் அவர்களும் சட்டத்தை மீறும் சந்தர்ப்பங்களும் அதன் விளைவுகளும் என்ற தலைப்பில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள தலைமை பரிசோதகர் திரு பத்மகாந்தன் அவர்களும் விரிவுரை நிகழ்த்தினர்.

கருத்தமர்வின் முடிவில் அவதானிப்பு ஆற்றல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, மன்னார் மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள கூட்டுறவு உத்தியோகத்தர் எஸ், சி, எம். குருஸ் அவர்களும் வருகை தந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

### வெள்ளி விழா

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் "வெள்ளி விழா" கொண்டாட்டங்களை நடாத்தியுள்ளது

சமாசத்தின் 25வது ஆண்டு நிறைவை முன்னிட்டு (72-97) வெள்ளிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்பெற்றது இதில் தரமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன,

வெள்ளிவிழா யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது

### விசேட பொதுக் கூட்டம்

முல்லைமேற்கு முள்ளியவளை ப. தெ. வ. அபி. கூ. சங்க விசேட பொதுக் கூட்டம் அதன் தலைவர் விஜயசந்திரன் அவர்கள் தலைமையில் மேற்படி சங்கத் தலைமை அலுவலகத்தில் மே 29ம் நாள் நடைபெற்றது பல்வேறு செயல்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டது.

### இணையம் கூட்டம்

முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணைய விசேட பொது கூட்டம் அதன் தலைவர் நா. நவரட்ணராசா தலைமையில் மே 19ம் திகதி நடைபெற்றது.

### பனை வெல்லம் ஏற்றுமதி

வன்னிப்பகுதியில் உற்பத்தியாகும் பனம் வெல்லத்தை வடபகுதிக்கு வெளியில் சந்தைப்படுத்த பேரிணையம் எடுத்த முயற்சிக்கு பலன் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

பேரிணையம் பனை அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொண்டதற்கிணங்க முதற்கட்டமாக 500kg பனம் வெல்லம் 500 kg பனாட்டு 500 போத்தல் பனம்பாணி என்பன அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பேரிணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன,

### புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் திட்டத்தை செயற்படுத்தி வரும் பேரிணையம் முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பனம் தொழில் வல்லுனர்களின் பிள்ளைகளான 8 மாணவர்களுக்கு 5ம் ஆண்டில் புலமைப் பரிசில் சித்தியெய்தியமைக்கான ஊக்குவிப்பு வழங்கப்பெற்றது. முள்ளியவளை ப, தெ, வ, அபி. கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த 6 மாணவர்களும் முல்லை தெற்கு ப. தெ. வ. அபி. கூ. சங்கம் முல்லை வடக்கு ப. தெ, வ, அ, கூ. சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த தலா ஒவ்வொரு மாணவனுக்கும் இப் புலமைப் பரிசில் கிடைத்துள்ளது.

### விசேட பொதுக் கூட்டம்

ஒட்டுசுட்டான் ப. தெ. வ. கூ. சங்க விசேட பொதுக் கூட்டம் மே 12ம் நாள் அதன் தலைவர் நா நவரட்ணராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டது.

### கௌரவிப்பு

முல்லை வடக்கு ப, தெ. வ அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர் பிள்ளைகளுக்கான 5ம் ஆண்டு புலமைப்பரிசில் கௌரவிப்பு நிகழ்வு மேற்படி சங்கத் தலைவர் செல்வசிங்கம் தலைமையில் மே 25 ஆம் நாள் அதன் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது; புலமைச் சித்தி எய்திய தனபாலசிங்கம் அஜிதா என்ற மாணவிக்கு 6 மாதக் கொடுப்பனவு வங்கியில் இடப்பட்டு அதற்கான வைப்புப் புத்தகம் வழங்கப் பெற்றது.

இந் நிகழ்வில் பேரிணையத் தலைவர், பொதுமுகாமையாளர் வலய அரசியல் துறைப் பொறுப்பாளர் பங்குபற்றி சிறப்பித்தனர்.

மாணவியின் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

> இம்மாத
> ## செய்திகளின் சங்கமம்
> செய்தியாக்கம் — கலி

### கருத்தமர்வு

பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர்கள் பணியாளர்களுக்கான சிறப்பு கருத்தமர்வு மேற்படி சங்கத் தலைவர் தலைமையில் யூன் 5ம் நாள் நடைபெற்றது.

பேரிணையத் தலைவர் க. நற்குணம் சிறப்புரையாற்றினார் மன் - பூநகரி தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பகுதி இணைப்பாளர் தாமரைச் செல்வன் கருத்துரை வழங்கினார்.

சங்கங்களின் பணிப்பாளர் பணியாளர்களின் சேவையும் சங்கங்களின் வளர்ச்சியும் என்னும் தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினார்.

### மூக்குக் கண்ணாடி வழங்கல்

பேரிணையத் திட்டத்தின் கீழ் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தில் கடந்த மே முதலாம் நாள் அதன் தலைவர் நா. நவரட்ணராசா தலைமையில் நடைபெற்றது.

இணையத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பார்வை குறைந்த 37 பனந் தொழில் வல்லுனர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

### கருத்தரங்கு

விஸ்வமடு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில் அங்கத்தவர்களுக்கான சமூக மேம்பாட்டுக் கருத்தரங்கு மே 20 ஆம் நாள் நடைபெற்றது

மேற்படி சங்கத் தலைவர் த. இராசதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தமர்வில் ப. தெ வ. அபி, கூட்டுறவுச் சங்கங்களின் தற்கால வளர்ச்சிப் போக்கு" என்னும் தலைப்பில் பேரிணைய பொது முகாமையாளர் விரிவுரை நிகழ்த்தினார்.

### பயிற்சிநெறி
(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரி சாதாரணதரப் பயிற்சி நெறியினை யூலை முதல் வாரத்தில் கல்லூரி மண்டபத்தில் தொடங்க இருப்பதாக அறிவித்துள்ளது கல்லூரியில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### கலந்துரையாடல்

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் இயங்கும் மன்னார் மாவட்ட பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களான, மடு பல நோ. கூ. சங்கம், மாந்தை வடக்கு பல நோ கூ. சங்கம், மாந்தை மேற்கு பல நோ. கூ. சங்கம் ஆகியவற்றில் சகல பணியாளர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று கடந்த மே 16 ஆம் திகதி மடு பல நோ. கூ, சங்கத்தில் நடைபெற்றது;

மடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பதில் பொது முகாமையாளர் திரு வி. சிவபாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது இக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செல்வி பிலோமினா சுவாம்பிள்ளை அவர்களும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு சி தவராசா அவர்களும் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு அ. மரியதாஸ் அவர்களும் மடு உதவி அரசாங்க அதிபர் திரு பரமதாசன் அவர்களும் மன்னார் / பூநகரி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு இசையமுதன அவர்களும் கூட்டுறவுப்பகுதி இணைப்பாளர் தாமரைச் செல்வன் அவர்களும் மேற்குறிப்பிட்ட சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்கள் பங்குபற்றி சிறப்பித்தனர்.

சங்கத்தின் தற்போதைய நிலை எதிர்கால செயற்பாடுகள் அதன் வளர்ச்சி நோக்கிய பாதையின் தடைகளை அகற்றுதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன

பணியாளர்களுக்கான கருத்தமர்வில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு சி. தவராசா அவர்கள் படிவ பதிவு முறைகளும் அதன் அவசியமும் என்ற தலைப்பில் கருத்து வழங்கினார். மன்னார் கூ. அ. உ. ஆணையாளர் பணியாளர்கள் தவறிழைக்காமல் பணியாற்றுவது எப்படி என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்.

நிவாரண விநியோகத்தின் போது கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் பற்றி மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் கருத்துரை வழங்கினார்.

ஒட்டுமொத்தமாக இக்கருத்தமர்வு சங்கத்தின் வளர்ச்சிக்கு பேருதவியாக அமைந்துள்ளது. என அனைவராலும் பாராட்டப் பற்றது இங்கு குறிப்பிடத்தக்கது,

### புதிய திட்டங்கள் அறிமுகம்

முழங்காவில் விநாயகபுரம் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டமும் புதிய நெறியாளர் குழுத் தெரிவும் மே திங்கள் 3 ஆம் திகதி நடைபெற்றது.

மேற்படி சங்கத் தலைவர் மூ. நவரட்ணம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு கிளி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள தலைமை பரிசோதகர் பத்மகாந்தன் அவர்களும் மன்னார் பூநகரிதமிழீழ நிர்வாகசேவை கூட்டுறவுப் பகுதி இணைப்பாளர் திரு. தி. தாமரைச் செல்வன் அவர்களும் பங்குபற்றி சிறப்பித்தனர்.

ஒன்பது பேர் கொண்ட நெறியாளர் குழு தெரிவு செய்யப்பட்டது

திரு ந சச்சிதானந்தம் தலைவர் திரு சி தவராஜசிங்கம் உப தலைவர் திரு சி விநாயகமூர்த்தி நிர்வாக செயலாளராகவும் பின்வருவோர் நெறியாளர்களாகவும் தெரிவாகினோர் திரு மு தயானந்தராசா செல்வன் க தவக்குமார் திரு இ ஆனந்தராசா திரு ந குணசேகரம் திருமதி கு சிவயோகம் திருமதி வ சரஸ்வதி நிறைவேற்றுச் செயலாளராக செ வ மோகநாதன் செயற்படுவார்

இப் புதிய நெறியாளர் குழு பதவியேற்றவுடன் புதிய திட்டங்களை விவசாயிகளின் நன்மை கருதி அமுல்படுத்தப்போவதாக தெரிவித்துள்ளனர்

பழமரக்கன்றுகள் உற்பத்தி பண்ணைத்திட்டம் தென்னை நாற்று உற்பத்தி உள்ளூர் மரக்கறி விதைகள் நாற்று உற்பத்திப்பண்ணை நெல்லின விதை நெல் உற்பத்தித் திட்டம் உள்ளூர் விளை பொருட்கள் கொள்வனவும் சந்தைப்படுத்தலும் பால் உற்பத்தியாளரிடமிருந்து பால் கொள்வனவும் சந்தைப்படுத்தலும் கால்நடைத்தீவனமும் மருந்துகள் விற்பனையும் போன்ற செயற்பாடுகள் முன்னெடுப்பதன் மூலம் பயனாளிகள் ஊக்குவிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது,

### மடு சுற்றுலா விடுதியில் அரச அதிபர் சந்திப்பு

மன்னார் மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் செயற்பட்டுவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே. விசுவலிங்கம் அவர்கள் சந்தித்து கலந்துரையாடினார்

பி, பகல் மே 25ஆம் நாள் மடு சுற்றுலா விடுதியில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

அத்தியாவசிய சேவைகள் தொடர்பாகவும், மேலும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கருத்துப் பரிமாற்றங்கள் நடந்தன அனைவரது கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்ட அரச அதிபர் நடவடிக்கைகள் எடுப்பதாக கூறிச் சென்றுள்ளார்

### பாவனைக்குதவாத பொருட்கள் அழிப்பு

மன்னார் - பூநகரி தமிழீழ நிர்வாகசேவை தனது நிர்வாகத்துக்குட்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனைக்குதவாத பயன்படுத்த முடியாத உணவுப் பொருட்கள் இனங்காணப்பட்டு அச் சங்கங்களின் நெறியாளர் குழுவின் மேற்பார்வையில் அழிக்கப்பட்டன;

### அங்கர் பால்மாவு வழங்கல்

கடந்த சுற்று நிவாரண விநியோகத்திற்கு மாந்தை வடக்கு, மாந்தை மேற்கு மடு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கர் பால்மாவு வழங்கியுள்ளதாக தெரியவருகிறது'

### முல்லை தெற்கு கருத்தமர்வு

முல்லை தெற்கு பனை தென்னை வள அபி கூட்டுறவுச் சங்கம் யூன் 9 ஆம் நாள் சமூக மேம்பாட்டு கருத்தரங்கு ஒன்றை நடாத்தியது, மேற்படி சங்கத் தலைவரின் தலைமையில் நடைபெற்ற கருத்தமர்விற்கான விரிவுரைகளை பேரிணையம் ஏற்பாடு செய்துள்ளது.

### கருத்தரங்கு

பனை; தெ: வ அ. கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர்சபை உறுப்பினர்களுக்கான திறன் உயர்வுக் கருத்தமர்வு 02-06-2012 திகதி சபையின் செயலாளர் தலைமையில் நடைபெற்றது இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பிரதேச கண்டாவளைப் பிரதேச கூட்டுறவுப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர் விரிவுரையாளர்களாக கிளி/கூட்டுறவுத் திணைக்கள தலைமைக் கூட்டுறவு பரிசோதகர்களான திரு த: பத்மானந்தன் திரு சி, சபாரத்தினம் ஆகியோர் விரிவுரையாற்றினர் இக் கருத்தமர்வில் கிளி/ பூநகரி பனை தெ. வ, அ கூ. சங்க பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

### பயிற்சிநெறி

கிளி/ மாவட்ட கூட்டுறவு சபையினால் 2001 ஆகஸ்ட் 1ம் திகதி கூட்டுறவுப்பணியாளர்களுக்கான கனிஸ்ட பிரிவு பயிற்சிநெறி ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களும் வெளிவாரிப்பயிற்சி மாணவர்களும் விண்ணப்பிக்கலாம் சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையாதவர்களும் விண்ணப்பிக்கலாம்

